# உடன்பிறப்பே... 97

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த பெ.சு.திருவேங்கடம் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**



## பெ.சு.திருவேங்கடம்

## திருவண்ணாமலை ‘பெரியவர்!’

1956-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற கழகத்தின் 2-வது மாநில மாநாட்டில் கலந்துகொண்டார் 21 வயதான இளைஞர் ஒருவர். அங்கு கிடைத்த எழுச்சியின் காரணமாக தன்னுடைய சொந்த ஊரான, பெரிய கிளாம்பாடி என்கிற கிராமத்தில், மாவட்டக் கழக முன்னோடி ப.உ.சண்முகம் அவர்களை அழைத்து வந்து, கழகக் கொடியேற்றி, கிளைக் கழகத்தைத் தொடங்குகிறார், அந்த இளைஞர். பின்னாட்களில் திருவண்ணாமலை மாவட்டத்தில் கழக அரசியலின் அடையாளமாக இருந்தார்.

மாவட்டக் கழகத்தினருக்கு ‘பெரியவர்’, கலைஞருக்கு நம்பிக்கை அளித்த உடன்பிறப்பு. அவர்தான் பெ.சு.திருவேங்கடம். கலசப்பாக்கம் தொகுதியைக் கழகக் கோட்டையாகக் கட்டியெழுப்பிய கொள்கைக்காரர். அன்றைய வட ஆற்காடு மாவட்டம், இன்றைய திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் அருகே உள்ள சிற்றூர் பெரிய கிளாம்பாடி. அங்கு 1935-ஆம் ஆண்டு பிறந்தவர் திருவேங்கடம். பெற்றோர் சுப்பராயன்- முனியம்மாள்.

### 21 வயதில் கிளைக் கழகம்

1950-களில் வட ஆற்காடு மாவட்டம், முழுவதும் பரவிய கழகக் கிளை அமைப்புகளின் செயல்பாடுகளால், இளைஞர்கள் மத்தியில் அரசியல் ஆர்வம் தீயாகப் பரவியது. அந்த ஆர்வத்துக்குக் கொள்கை உரமேற்றின கழகத்தினர் நடத்திய ஏடுகள்.

பள்ளிப் பருவத்திலேயே அரசியல் ஆர்வம் கொண்டிருந்த திருவேங்கடம், நண்பர்களின் உதவியுடன் அறிஞர் அண்ணா அவர்களின் **‘திராவிட நாடு’**, கலைஞரின் **‘முரசொலி’** மற்றும் முன்னோடிகளின் கழக ஏடுகளை வாசிக்கத் தொடங்கி, கழகத்தின் தொடக்க காலத்திலேயே களப்பணிகளில், தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 1954-ஆம் ஆண்டில் அவரது 21 வயதில் கழகத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டார்.

அன்றைய வட ஆற்காடு மாவட்டத்தில் கழகத்தின் அடையாளமாக இருந்த ப.உ.சண்முகம் அவர்களின் பாசறையில் பயின்ற திருவேங்கடம், 1956-ஆம் ஆண்டு தன்னுடைய சொந்த ஊரான பெரிய கிளாம்பாடி கிராமத்தில், ப.உ.ச. அவர்களை அழைத்து வந்து கிளைக் கழகத்தைத் தொடங்கினார். அப்போதே அவர், ஊராட்சி மன்றத் தலைவராக செயல்பட்டது, கழகத்தின் எதிர்கால வெற்றிக்குக் கட்டியம் கூறுவதாக இருந்தது. பெரிய கிளாம்பாடி ஊராட்சியின் தலைவராக, 1979-ஆம் ஆண்டு வரை தொடர்ந்து பணியாற்றிக் கழக செல்வாக்கினை நிலைநாட்டியவர்.

### முதல் மின்விளக்கு

1962-ஆம் ஆண்டு ஊராட்சி மன்றத் தலைவராகப் பொறுப்பேற்றபோது, பேரறிஞர் அண்ணா அவர்களை, தனது ஊராட்சிக்கு அழைத்து, முதன்முதலில் மின்வசதியைத் துவக்கி வைக்கச் செய்து ஊரையே ஒளிரச் செய்தார்.

1965 ஆம் ஆண்டு துரிஞ்சாபுரம் ஒன்றியத் துணைத் தலைவராகவும், 1970-77வரை துரிஞ்சாபுரம் ஒன்றியக் குழுத் தலைவராகவும் பணியாற்றினார். அந்தக் காலகட்டங்களில் அப்பகுதிகளில் பள்ளிகள், கிராமச் சாலைகள் அமைப்பதற்கு அரும்பணியாற்றியவர் திருவேங்கடம்.

‘கட்சிப் பணி, ஊராட்சிப் பணி என பிரித்தறிய முடியாமல், அவரது பயணங்கள் கிராமம் கிராமமாகத் தொடரும். தனது சைக்கிளில் எப்போதும் காற்றடிக்கும் பம்பு, பஞ்சர் ஒட்டும் பொருட்களையும் எடுத்துச் செல்வார்’ என அவரது அரசியல் பணியினை அறிந்த கழகத்தினர் குறிப்பிடுகின்றனர்.

அண்ணாவிடம் நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றவராக இருந்த திருவேங்கடம், கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றவர். 1962-ஆம் ஆண்டு விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு கைதாகி, பேரறிஞர் அண்ணா அவர்களோடு வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் வேலூர் சிறைப் பட்டியலில் அவர் பெயர் இடம் பெற்றது.

### கலைஞர் நம்பிக்கை

அண்ணாவின் மறைவுக்குப் பின், கழகத்தின் தலைமைக்கு கலைஞர்தான் பொருத்தமானவர் என நம்பிக்கை வைத்தவர். அவர் அரசியல் பயின்ற முன்னோடி ப.உ.ச அவர்கள் கழகத்தில் இருந்து வெளியேறியபோதும், ‘தனக்கு ஒரே தலைவர் கலைஞர்தான்’ என உறுதியாக நின்றவர்.

1977-ஆம் ஆண்டு, மாபெரும் நெருக்கடிகளுக்குப் பின் கழகம் சந்தித்த தேர்தலில் கலசப்பாக்கம் தொகுதியின் வெற்றியை கலைஞரிடம் கொண்டு வந்துசேர்த்தார்.

**கழகம் ஆட்சியில் அமர்ந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், கலசப்பாக்கம் தொகுதியில் ‘கழகமே களம் காண வேண்டும், உதயசூரியன் சின்னத்தை, கிராமம் கிராமமாக கொண்டு செல்ல வேண்டும்’ என உறுதி கொண்டவர் திருவேங்கடம்.**

தனது தனிப்பட்ட செல்வாக்கும், கழக செல்வாக்கும் ஒன்றுதான் என அந்தத் தேர்தலின்போது நிரூபித்தவர், திருவேங்கடம். 1980 ஆம் ஆண்டு தேர்தல் அலையின்போதும் கலசப்பாக்கம் தொகுதி கழகத்தின் வசமே இருந்தது. 54 சதவிகித வாக்குகளைப் பெற்றிருந்தார் திருவேங்கடம்.

கலைஞர் மீது திருவேங்கடம் கொண்டிருந்த நம்பிக்கை போல, அவர்மீது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்குச் சான்று அந்த வெற்றி.

அதேபோல, கழகத் தலைவராக கலைஞரும் திருவேங்கடம் மீது மாறா நம்பிக்கைக் கொண்டிருந்தார். தொடர்ச்சியாக ஏழுமுறை கலசப்பாக்கம் தொகுதியின் வேட்பாளராக திருவேங்கடம் பெயரையே தேர்வு செய்து அதைச் சொல்லாமல் சொன்னார் கலைஞர். அதில் நான்கு முறை வெற்றி பெற்று சட்டமன்றத்துக்குச் சென்றுள்ளார் திருவேங்கடம்.

### கழகப் பணியும் மக்கள் பணியும்

நங்கவரம் விவசாயிகள் பிரச்சினையை, சட்டமன்றத்தில் எழுப்பி தீர்வு கண்ட கலைஞர், கழகம் எதிர்க்கட்சியாக இருந்த சட்டமன்றத்தில் விவசாயிகள் பிரச்சினையைப் பேச திருவேங்கடத்தையே அழைப்பார். கழகத்தின் தேர்தல் பணிக்குழுச் செயலாளராகப் பொறுப்பில் இருந்தபோது, கழக அமைப்புத் தேர்தல்களை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டி கழகத்தினர் நன்மதிப்பைப் பெற்றவர்.

பெரிய கிளாம்பாடி கிளைக் கழகச் செயலாளர், துரிஞ்சாபுரம் ஒன்றியக் கழகச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கழகச் சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், கழகத்தின் சொத்துப் பாதுகாப்புக் குழுச் செயலாளர் என படிப்படியாக கழகப் பொறுப்புகளில் வளர்ந்தவர் திருவேங்கடம்.

பெரிய கிளாம்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கச் செயலாளராகவும், திருவண்ணாமலை வட்ட பிரதம நில வள வங்கித் தலைவராகவும், திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத் தலைவராகவும், வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு விற்பனை இணைய உறுப்பினராகவும், மாநில நிலவள வங்கி இயக்குநராகவும் பணியாற்றி, அங்கும் கழக உணர்வுடன் மக்கள் பணி செய்தவர்.

### அண்ணா விருது

பொது வாழ்க்கையில், கொள்கை மாறாமல், தலைமை மீது தடம் மாறாமல் பயணித்த பேரறிஞர் அண்ணாவின் அன்புத் தம்பி திருவேங்கடத்துக்கு, 2017-ஆம் ஆண்டில் திண்டுக்கல், அண்ணா திடலில் நடைபெற்ற தலைமைக் கழக முப்பெரும் விழாவில், பேரறிஞர் அண்ணா விருது அளித்து, சிறப்பு செய்தார் அன்றைய செயல்தலைவர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள்.

கழகம் ஆட்சியில் அமர்ந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், கலசப்பாக்கம் தொகுதியில் ‘கழகமே களம் காண வேண்டும், உதயசூரியன் சின்னத்தை, கிராமம் கிராமமாக கொண்டு செல்ல வேண்டும்’ என உறுதி கொண்டவர் திருவேங்கடம். 2006, 2011, 2016 தேர்தல்களில் கழகம் அங்கு போட்டியிடாத நிலையில், 2021 தேர்தலில் ‘கழகத் தலைவரே அங்கு போட்டியிட வேண்டும், நான் பிரச்சாரம் செய்யவேண்டும்’ என 87 வயதில் கோரிக்கை வைத்த, அந்த மூத்த முன்னோடியை வியப்புடன் பார்த்தனர் கழகத்தினர்.

தலைமைக் கழகம் தந்த வாய்ப்பில், அவரது மகன் பெ.சு.தி.சரவணன் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வானார். ஆனால், கழக வெற்றி என்பதுதான் திருவேங்கடம் அவர்கள் கொண்டிருந்த கழகப் பற்று. அந்த எண்ணம் ஈடேறியதில், அடுத்த ஓராண்டில் தனது 88-வது வயதில் இயற்கை எய்தினார்.

கழகத் தலைவரின் இரங்கல் அறிக்கை திருவேங்கடம் அவர்களின் புகழைப் பேசியது. ‘பெரியவர்’ திருவேங்கடம் அவர்களின் புகழ் காலகாலத்துக்கும் மறையாது . அது கழகத்தின் உணர்வுடன் கலந்திருக்கும்.

**...துடிக்கும்**

## குஜராத் தந்த உண்மையான வளர்ச்சி!

அமெரிக்காவில் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் டிரம்ப் அரசு, சட்டவிரோதமாகத் தங்கியிருப்பவர்களை நாடு கடத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. அதில் இந்தியர்களும் அதிகமாக இருக்கின்றனர். 2023-ஆம் ஆண்டில் மட்டும், இந்தியாவில் இருந்து 67 ஆயிரத்து 391 பேர் சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 41 ஆயிரத்து 330 பேர் குஜராத்தில் இருந்து சென்றவர்கள். 29 ஆண்டுகளாகத் தொடர்ந்து பாரதிய ஜனதா கட்சி ஆண்டு வரும் இம்மாநிலத்தில் இருந்து, ஏன் இவ்வளவு பேர் புலம்பெயர்ந்து ஓடுகிறார்கள், என்ற கேள்வி மிக முக்கியமானது.

குஜராத்தில் இருந்து புலம்பெயர்ந்து செல்வோர் கிராமப்புறங்களைச் சேர்ந்த கூலித் தொழிலாளிகளாகவே உள்ளனர். ஏனென்றால் குஜராத்தில் சாதாரண கூலித் தொழிலாளிகளின் ஒருநாள் வருமானம் 375 ரூபாய். இது தேசிய சராசரியைவிட, குறைவு என்பது மட்டுமல்ல, பெரிய மாநிலங்களில் சத்தீஸ்கர் மட்டும்தான், குஜராத்தைவிட பின்தங்கியுள்ளது. ஆனால், தமிழ்நாட்டில் கூலித் தொழிலாளர்களின் சராசரி வருமானம் நாள் ஒன்றுக்கு 584 ரூபாய். அமைப்புசார்ந்த வேலையில் இருப்போரின் மாதாந்திர சராசரி வருமானம், குஜராத்தில் 17,503 ரூபாய். அதுவும் தேசிய சராசரியை விட குறைவு. தமிழ்நாட்டில் 21,266 ரூபாய்.

வருவாய் குறைவு என்பதால், குஜராத் கூலித்தொழிலாளர்களிடம் செலவு செய்யும் திறனும் குறைவாகவே உள்ளது. வறுமைக் குறியீட்டில் 11.66%-ஆக குஜராத் பின்தங்கியுள்ளது. தமிழ்நாடு 2.20% அளவில் உலக சுகாதார அமைப்பின் இலக்குகளைக் கடந்துவிட்டது. மூலதன நிதித் திரட்டில் பத்து ஆண்டுகளுக்கு முன்புவரை, தமிழ்நாட்டை விட குஜராத் முன்னிலையில் இருந்தது. ஆனாலும், தமிழ்நாடு உருவாக்கிய தொழிற்சாலை வேலைவாய்ப்புகளில் பாதியைக் கூட குஜராத் உருவாக்கவில்லை.

2004-14 வரை குஜராத் முதல்வராக நரேந்திர மோடி இருந்தபோது, அம்மாநிலத்தில் சுமார் 60,000 சிறு குறு நடுத்தர நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. இன்றுவரை சிறு குறு தொழில் வளர்ச்சியில், குஜராத் பின் தங்கியே உள்ளது. ஆனால், குஜராத்தில் சிறு நிறுவனமாக இருந்த அதானி நிறுவனம், இன்றைக்கு இந்தியா முழுவதும் கிளை பரப்பி, ஒன்றரை லட்சம் ஊழியர்களைக் கொண்ட நிறுவனமாக வளர்ந்திருக்கிறது. இதுதான் குஜராத் தந்த உண்மையான வளர்ச்சி!

## :ப்ளாஷ்பேக்



ம.சுதாகர்



### மனநிறைவு தந்த, தலைவரின் வாழ்த்து!

2015-ஆம் ஆண்டு எங்களது இல்லத் திறப்பு விழா அழைப்பிதழை, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடம் அளித்து, வாழ்த்துப் பெற விரும்பினேன். குடும்பத்தினருடன், ‘கோபாலபுரம் இல்லம்’ சென்று, தலைவரிடம் அழைப்பிதழை வழங்கினோம், அழைப்பிதழைப் படித்துப் பார்த்து, எங்களை வாழ்த்தியதுடன், என் குழந்தைகளிடம், ‘என்ன படிக்கிறீர்கள்?’ என்றும் கேட்டறிந்தார், அன்று தலைவரின் வாழ்த்தில் மனநிறைவு பெற்றோம்.

**- ம.சுதாகர்,**
**அயலக அணிப் பகுதி அமைப்பாளர்,**
**மதுரவாயல் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### இலக்கிய அணி தொடக்கம்!

1978-ஆம் ஆண்டு கழகத்தின் இலக்கிய அணி தொடங்கி வைக்கப்பட்டது. அந்த ஆண்டு, ஏப்ரல் மாதம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பிறந்த நாள் விழாவும், சென்னை மாவட்ட இலக்கிய அணியின் துவக்க விழாவும் நடைபெற்றன. ‘கழகத்துக்கு என இலக்கிய அணி தொடங்க வேண்டும், அந்த அணியின் சார்பில், தமிழ்நாடு முழுவதும் இலக்கிய நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்று நீண்ட நாள்களாக நான் நினைத்தது நிறைவேறியது’ என நிகழ்ச்சியில் குறிப்பிட்டார் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

750

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131